# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்
பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை
ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்
ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | மதுரை | காலம் : | 21/09/2022 | முதல் | 25/09/2022 |
| அறிக்கை எண் : | 075/ 2022 | வெளியீட்டு நாள் : | | 20/09/2022 | |

## மதுரை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 36° - 37° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23° - 25° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (15.09.2022 முதல் 19.09.2022) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 25-09-2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 15/09 | 16/09 | 17/09 | 18/09 | 19/09 | தேதி | நாள்-1 21/09 | நாள்-2 22/09 | நாள்-3 23/09 | நாள்-4 24/09 | நாள்-5 25/09 |
| 5.1 | 0.0 | 0.0 | 0.0 | 6.6 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 4 | 4 |
| 37 | 36 | 36 | 37 | 37 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 36 | 36 | 36 | 36 | 35 |
| 23 | 23 | 25 | 25 | 24 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 25 | 25 | 25 | 25 | 24 |
| 4 | 3 | 5 | 5 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 4 | 5 | 6 | 6 |
| 75 | 66 | 69 | 63 | 71 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 52 | 47 | 51 | 57 | 55 | | 55 | 55 | 55 | 60 | 60 |
| 4 | 1 | 13 | 8 | 7 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 8 | 8 | 8 | 8 | 8 |
| வட கிழக்கு | வட மேற்கு | தென் கிழக்கு | வட மேற்கு | மேற்கு | **காற்றின் திசை** | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | வட மேற்கு | வட மேற்கு |

**குறுஞ்செய்தி** :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் செப்டம்பர், 24, 25 தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 35°-36° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 24°-25° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 கி.மீ வேகத்தில், வடமேற்கு மற்றும் தென்மேற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

அடுத்த இரு வாரத்திற்கான நீட்டி விரிவாக்கபட்ட வரம்பு வானிலை முன்னறிவிப்பு **(23-29 செப் 2022):**

**மழைப்பொழிவு :**

23-09-2022 –29-09-2022: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பை விட குறைவான மழை பெய்ய வாய்ப்பு.

**அதிகபட்ச வெப்பநிலை :**

அடுத்த 7 நாட்களுக்கு மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும்.28°செல்சியஸ் முதல் 30° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

குறைந்தபட்ச வெப்பநிலை :

குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில், மாவட்டத்தில் அடுத்த 7 நாட்களுக்கு பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 20° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள்** : பருத்தி, நிலக்கடலை, கால்நடை.

பருத்தி:

- ❖ பருத்திப் பயிரில் புள்ளிக் காய்ப்புழு கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு 400மில்லி என்ற அளவில் பிப்ரோனில் மருந்தினை கலந்து தெளிக்கவும்.

நிலக்கடலை:

- ❖ நிலக்கடலையில் வேரழுகல் நோயின் தாக்கத்தை கட்டுப்படுத்த,
- ❖ ஒரு கிலோ விதைக்கு ட்ரைக்கோடெர்மா விரிடி 5 - 10கிராம் மற்றும் பேசிலஸ் சப்டிலஸ் 10 கிராம் என்ற அளவில் கலந்து விதைநேர்த்தி செய்து பயிரிடவும்.

கால்நடை:

- ❖ பசு கன்றுகளுக்கு மாதம் ஒருமுறை என முறையாகக் குடற்புழு நீக்க மருந்தை அளித்தல் வேண்டும்.
- ❖ அவ்வப்போது சாணத்தை கண்காணித்து அருகில் உள்ள கால்நடை மருத்துவரின் ஆலோசனை பெற்று,
- ❖ உரிய குடற்புழு நீக்க மருந்து அளிப்பதால் குடற்புழுக்கள் நீக்கப்படுவதோடு,
- ❖ கன்று உட்கொள்ளும் தீவனம் முழுமையாக உட்கிரகிக்கப்பட்டு, கன்றின் துரித வளர்ச்சி, விரைவில் பருவமடைதல் மற்றும் உடல் எடைபெருக்கம் ஆகியவற்றிற்கு பெரிதும் உதவுகிறது